செ.வெ.எண்.247 நாள்.16.04.2018.

**திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுமான பூமி பூஜையினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு, கட்டடப் பணிகளை தொடங்கி வைத்தார்.**

-------

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுமான பணிகளுக்கான பூமி பூஜை நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.04.2018) நடைபெற்றது. இப்பூமி பூஜை நிகழ்ச்சியில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் சேரன்மகாதேவியினை தலைமையிடமாக கொண்டு சேரன்மகாதேவி வட்டம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. சேரன்மகாதேவி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட ரூ.2 கோடியே 62 இலட்சம் நிதி ஒதுக்கீடு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடம் தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் 1180 சதுர மீட்டர் பரப்பளவில் அமையவுள்ளது. தரை தளத்தில் வட்டாட்சியர் அறை, பிராட்மா பிரிவு, கணினி அறை, அலுவலகம், தகவல் விசாரணை சேவை அறை, கழிப்பறை மற்றும் முதல் தளத்தில் அலுவலகம், பதிவறை, கூட்டரங்கம் அமையவுள்ளது. இக்கட்டடத்தில் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எளிதாக வந்து செல்ல சாய்வு தளம் வசதி அமைக்கப்படவுள்ளது. மேலும், இவ்வலுவலக வளாகத்தில் வட்டாட்சியர் குடியிருப்பு 956 சதுர அடி பரப்பளவில் கட்டப்படவுள்ளது. பொதுமக்கள் காத்திருக்கும் அறை, இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் ஆகியவை அமையவுள்ளது. இக்கட்டட கட்டுமானப் பணிகள் 11 மாதத்திற்குள் முடிக்கப்படும். பொதுமக்கள் வந்து செல்ல வசதியாக பிரதான சாலையின் பகுதியிலும், சேரன்மகாதேவி நீதி மன்ற அருகிலும் இக்கட்டடம் கட்டப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி பாராளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிராபாகரன், அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.முருகையாபாண்டியன், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., பொதுப்பணித் துறை, செயற்பொறியாளர் திரு.பாஸ்கர், உதவி செயற்பொறியாளர் திரு.சத்தியவாலீஸ்வரன், முக்கிய பிரமுகர்கள் திரு.எம்.சக்திவேல் முருகன், திரு.செவ்வல் முத்துசாமி, திரு.சுதா பரமசிவம், திரு.பரணி சங்கரலிங்கம், திரு.கண்ணன் (எ) ராஜு, திரு.சுப்பையாபாண்டியன், திரு.நாராணயபெருமாள், திரு.ஜெரால்ட், திரு.சேர்மபாண்டி, திரு.ஆறுமுகம், திரு.கபேரியல் ராஜன், திரு.பெரிய பெருமாள், திரு.நடராஜன், திரு.பூவரசன், திரு.பழனிகுமார், திருமதி.பார்வதி பாக்கியம், சேரன்மகாதேவி வட்டாட்சியர் திருமதி.ராஜேஸ்வரி மற்றும் அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.